**செய்தி வெளியீடு எண் : 2407** **நாள் : 31.12.2022**

# மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

**<u>மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்</u>**

அனைவருக்கும் வணக்கம். குழுமியிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு 2023 வாழ்த்துகளை முதற்கண் நாங்கள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். கலைப்பண்பாட்டுத் துறையினுடைய சார்பில், சென்னை சங்கமம், நம்ம ஊரு திருவிழாவாக இந்த ஆண்டு மிகச் சிறப்பான வகையில் தமிழகத்தின் தலைநகராக இருக்கக்கூடிய சென்னையில் நடக்கக்கூடிய கலைவிழா குறித்து இந்த பத்திரிகையாளர் சந்திப்பின் வாயிலாக நானும் நம்முடைய மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்களும், நம்முடைய துறையினுடைய செயலாளர் அவர்களும், இயக்குநர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி உங்களை சந்திக்க இருக்கிறோம்.

பொதுவாக ஜனவரி மாதம் தமிழ்நாடு முழுவதும் விழாக்கோலம் பூணக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்புகள் அமைந்திருக்கிறது. விளவுமலி முதூர் என்று இலக்கியங்களில் குறிப்பிட்டிருப்பதுபோல, தமிழ்நாட்டின் நிலப்பரப்பு எங்கும் வரக்கூடிய ஜனவரி மாதம் தமிழர்தம் வரலாற்றை நம்முடைய இலக்கியச் செழுமையை, நாகரீகத்தை, பண்பாட்டை, நாட்டுப்புற கலைவடிவங்களை அடையாளப்படுத்தக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள், தமிழ்நாடு எங்கும் வரக்கூடிய ஜனவரி மாதம் நிகழ்த்தப்படவிருக்கிறது. குறிப்பாக, ஏறு தழுவுதல், பன்னாட்டு

புத்தகக்காட்சி, அயலக தமிழர் நாள், மாபெரும் தமிழ் கனவு திட்டம், சென்னை சங்கமம், தமிழர் விருதுகள், சென்னை இலக்கிய விழா, சென்னை புத்தகக்காட்சி அதனுடைய முத்தாய்ப்பாக "பொங்கல் திருவிழா" என்று தமிழர்தம் பெருமையைப் பறைசாற்றக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி, அவருடைய முன்னெடுப்பின்படி, தமிழ்நாடு முழுவதும் வரக்கூடிய ஜனவரி மாதம் நடைபெற இருக்கிறது. இந்த கொண்டாட்டங்கள் புத்தாண்டில் துவங்க இருக்கிறது. அதனுடைய மிக முக்கியமான ஒரு பகுதியாக, சென்னை சங்கமம் நிகழ்ச்சி, இது நம்ம ஊரு திருவிழாவாக இணைந்து ஒரு புத்தாக்கத்துடனும், புத்துணர்ச்சியுடனும், இந்த ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதி துவங்கி, 17ஆம் தேதி வரை மிகச் சிறப்பாக சென்னை மாநகரில் நடைபெறவிருக்கிறது. கடந்த ஆண்டு இது நம்ம ஊரு திருவிழாவாக நடைபெற்றிருந்த நாட்டுப்புற கலை நிகழ்ச்சி இந்த ஆண்டு சென்னை சங்கமம் புதுப்பொழிவோடு இணைந்து சென்னை சங்கமம், இது நம்ம ஊரு திருவிழாவாக சிறப்பான வகையில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழியினுடைய ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்ச்சிகள் மிளிர இருக்கிறது. இதைத்தொடர்ந்து, தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலும், 7 மண்டலங்களாக இருக்கக்கூடிய சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி உள்ளிட்டிருக்கக்கூடிய எல்லா இடங்களிலும், இந்த கலை நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் நான் ஏற்கனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மிகச்சிறப்பான ஒரு பாரம்பரிய நாட்டுப்புற கலைஞர்களுடைய வடிவங்களை அடையாளப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளாகவும், அதோடு இணைந்து பஞ்சாப், அஸ்ஸாம், மேற்கு வங்கம் போன்றிருக்கக்கூடிய இதர மாநிலங்களிலிருந்தும், சில நிகழ்ச்சிகளை இணைந்து நம்முடைய ஒருமைப்பாட்டையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சிகள் அமைய இருக்கிறது. மிக முக்கியமாக நிகழ்ச்சியினுடைய துவக்கமாக இருக்கக்கூடிய

ஜனவரி 13ஆம் நாள் மாலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனுடைய தொடக்க விழாவினை சென்னை தீவுத்திடலில் அன்றைக்கு மிகப் பெரிய பிரம்மாண்டமான கலை விழாவோடு இதை துவங்கி வைக்கிறார்கள்.

**<u>நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள்</u>**

தீவுத்திடலில் ஜனவரி மாதம் 13ஆம் தேதி இந்த நிகழ்வுகள் தொடங்கும். அடுத்த நாள் 14ஆம் தேதியிலிருந்து, சென்னையில் இருக்கக்கூடிய பல்வேறு பூங்காக்கள், விளையாட்டுத்திடல்கள், கிட்டத்தட்ட 16 இடங்களில் இந்த கலை நிகழ்ச்சிகள் மாலை நேரங்களில் தொடர்ந்து நடைபெறும். அந்த கலை நிகழ்ச்சிகளோடு சேர்த்து உணவுத் திருவிழாவும் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய நம்முடைய பாரம்பரிய உணவுகள், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் அதிகமாக விரும்பக்கூடிய உணவுகள், சென்னைக்கு அதிகம் பழக்கம் இல்லாத உணவுகள், இவை அனைத்தையும் கொண்டு வந்து உணவுத் திருவிழாவையும் இணைத்து நடத்த இருக்கிறோம். முதல் நாள் நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் கலந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சி, 14ஆம் தேதியும், மறுபடியும் நிகழ்ச்சியாக (repeat programme) அதே தீவுத்திடலில் நடைபெறும். இந்த நிகழ்ச்சிக்கு இசைக்கலைஞர்களையும் ஒருங்கிணைத்து அதற்கான அடிப்படை இசையை உருவாக்கித் தரப்போவது திரைப்பட இசைக்கலைஞர் திரு. சந்தோஷ் நாராயணன் அவர்கள், அவருடைய குழுவினர் நம்மோடு இணைந்து இந்த நிகழ்ச்சியை நமக்காக ஒருங்கிணைந்து தரப்போகிறார்கள். தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இருந்து நம்முடைய பாரம்பரிய கலைஞர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல், முன்பு சென்னை சங்கமத்தில் நடந்தபோது, சில உள்ளூர் இசைக்குழுக்கள் (local bands) புதியதாக இளைஞர்கள் நடத்தக்கூடிய அந்த நிகழ்வுகள் மற்றும் கர்நாடக சங்கீதத்தில் இருக்கக்கூடிய சில நபர்கள் சில பூங்காக்களில் நிகழ்ச்சிகளில் பங்கேற்று நடத்துவார்கள்.

**கேள்வி:** எவ்வளவு கலைஞர்கள் கலந்து கொள்வார்கள்.

**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களின் பதில்** : ஒட்டுமொத்தமாக இந்த குழுக்களில் மட்டும் 170 நபர்கள் கலந்து கொள்கிறார்கள். அதாவது தொடக்க விழாவில் (inaugural shows).

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில்** : மொத்தம் கிட்டத்தட்ட 700 நபர்கள் கலந்து கொள்வார்கள்.

**கேள்வி** : 13ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று சொல்கிறீர்கள். இதற்காக பொதுமக்களுக்கு கட்டணங்கள் இருக்கிறதா? அல்லது இலவசமாக பார்வையிடலாமா?

**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களின் பதில்** : கண்டிப்பாக இலவசமாக பார்வையிடலாம். அதற்கு முன்பு சென்னை சங்கம திருவிழாவில் கட்டணங்களே இல்லையே. கடந்த முறை நடந்தபோது கட்டணம் கிடையாது. ஆனால் உணவுத் திருவிழாவில் கலந்துகொள்ளும் போது கட்டணம் உண்டு.

**கேள்வி:** 10 வருடத்திற்கு முன்பு அன்றைய முதலமைச்சராக இருந்தபோது, சென்னை சங்கமம் வெற்றிகரமாக நடத்தினீர்கள். அவர் இல்லாமல் இவ்வளவு வருடங்கள் கழித்து தற்போது நடத்தும்போது தனிப்பட்ட முறையில் எப்படி உணர்கிறீர்கள்?

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில்** : நிச்சயமாக அவர் இல்லாத ஒரு உணர்வு எப்போதும் அது இருந்து கொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் அதே ஆர்வத்தோடு இந்த நிகழ்ச்சியை நடத்தவேண்டும் என்றும், முன்னர் ஒரு

தனிப்பட்ட நிறுவனம், அரசாங்க உதவியோடு வெளியில் இருந்துதான் இந்த நிகழ்வுகளை ஒருங்கிணைத்தோம். இந்த முறை அரசே ஏற்று நடத்தக்கூடிய அளவுக்கு சென்னை சங்கமம் இந்த ஆண்டிலிருந்து அரசு நிகழ்ச்சியாக நடைபெறவிருக்கிறது. அதை பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இனிமேல் தொடர்ந்து நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**கேள்வி** : கோவிட் கட்டுப்பாடு இருக்குமா? இவ்வளவு நபர்கள் தான் வரவேண்டும். அதைப்பற்றி....

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில்** : இதுவரை இல்லை.

**கேள்வி** : நாட்டுப்புற கலைஞர்களுக்கு எந்த அளவுக்கு இந்த நிகழ்ச்சி அங்கீகாரம் இருக்கிறது. இது எந்த அளவுக்கு உங்களுக்கு உந்துதலை கொடுக்கிறது.

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில்** : சென்றமுறை நடந்தபோது அவர்களிடம் பேசும்போது, பலர் பல நாடுகளுக்கு சென்று நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்போது பொது தளங்களில் வாய்ப்புகள் கிடைப்பதற்கு இதுவும் ஒரு வழியாக இருந்தது. ஆதலால், இன்னும் மறுபடியும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை வளர்க்கக்கூடிய விஷயமாக இருக்கும். அதைத்தாண்டி, மக்களுக்கு நம்முடைய மண் சார்ந்த கலைகள் இவ்வளவு இருக்கிறது என்பதை அடுத்த தலைமுறைக்கு இது கொண்டு போய் சேர்க்கக்கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**கேள்வி** : Digital connect ஏதாவது இருக்குமா?

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில் :** சில இடங்களில் நிச்சயமாக live இருக்கும் (Inaugural Show கண்டிப்பாக ஒளிபரப்பப்படும்). ஒவ்வொரு நாளும் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு அடுத்த நாள் இணைய தளங்களில் போடப்படும். அதற்காக நீங்கள் வீட்டிலிருந்தபடியே பார்க்க வேண்டாம். நேரில் வந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கேள்வி** : தீவுத்திடலில் கடந்த ஆண்டு உணவுத் திருவிழாவில் மாட்டிறைச்சி சர்ச்சை ஆனது. அதற்கு ஏதாவது அனுமதியுண்டா?

**நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களின் பதில் :** உணவு என்பது ஒரு ஒரு தனிப்பட்ட முடிவு (Personal Decision) அதை சர்ச்சையாக்க வேண்டிய அவசியமில்லை.

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in